1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் சொல்லுகின்றபோது நோய் வருவதாகச் சொன்னார்கள். இந்தச் சத்துணவு வழங்கப்பட்டக் காரணத்தினாலேதான் அந்தக் குழந்தைகளுக்கு வருகின்ற நோய்த் தடுக்கப்பட்டிருக்கிறது. உணவு சரியாக இல்லாத காரணத்தினால் நோய் வந்து கொண்டிருந்தது. இப்போது அந்த நோய் வருவது, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அந்தக் குழந்தைகளுக்கு அந்த நோய் குறைந்திருக்கிறது. வலுவான ஒரு சந்ததியை உருவாக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக் கொள்வது நீங்கள் எந்தக் குறையைச் சொல்ல நினைத்தாலும் அதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து தடுத்திருக்கிறது என்பதை இங்கே வருகின்ற பதில் மூலமாக உறுப்பினருக்குப் புரிகிறது என்று கருதுகிறேன். எனவே, ஏதாவது உண்மையிலே குறை இருப்பதைத் தேடிப்பிடித்து வந்து சொன்னால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 59. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

59—

கால்நடை பெருக்குத் திட்டம் மற்றும் தீவன உற்பத்தித் திட்டம் செயல்படுத்த உலக வங்கி வழங்கிய உதவி.

* 9021—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பெருக்குத் திட்டம் மற்றும் தீவன உற்பத்தித் திட்டம் செயல்படுத்த உலக வங்கி வழங்கிய நிதி உதவி எவ்வளவு ?

(ஆ) அத்திட்டத்தின் கீழ் உறை விந்து கொண்டு செல்லவும் பாதுகாக்கவும் உபயோகிக்கப்படும் திரவ நைட்ரஜன் எவ்வாறு பெறப்படுகின்றது ?

(இ) அதற்கு இதுவரை செலவான தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ரூ. 46.62 கோடி.

(ஆ) தேவைப்படும் திரவ நைட்டிரஜன், கால்நடை பராமரிப்புத் துறையின் ஈச்சங்கோட்டை அபிசேகப்பட்டி மற்றும் ஓசூர் பண்ணைகளில் தயாரிக்கப்படுகிறது. மேலும் அதிகப்படியாக தேவைப்படும் பொழுது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இணையம் மற்றும் தனியார் துறைகளின் மூலமும் பெறப்படுகிறது.

(இ) 1991—92-ம் ஆண்டில் 1,83,777 லிட்டர் திரவ நைட்ரஜன், ரூ. 17,03,673க்கு தனியார் நிறுவனங்கள் மூலம் பெற்று உபயோகப்படுத்தப்பட்டது.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து மருத்துவ மனைகளிலும் உறை விந்து வைத்துக் கொள்ள வசதி ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறை விந்து வசதி ஏற்படுத்துவதற்காகத்தான் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இது போன்ற மாபெரும் திட்டத்தினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 60. திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

60—

அனந்த கோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி.

*11962 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சி அனந்தகோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி ஒன்றை அமைக்க 1992—93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?